இணைப்பு II

(877 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

அறிவிப்புகள், 2010–2011

சமூக நலத் துறை

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் போல பிற திருமண உதவித் திட்டங்களான

- ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்.
- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்
- அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்
- அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்.

ஆகியவற்றிற்கும் திருமண நிதியுதவி 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

2. குழந்தைகளின் நலத்திற்காக அவர்களின் உரிமை காக்கப்படுவதற்காக இந்த ஆண்டு முதல் மத்திய-மாநில அரசு நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் அதாவது Integrated Child Protection Scheme செயற்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்படி—

- அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்கள் அதாவது Juvenile Justice Board அமைக்கப்படும்.
- குழந்தைகள் நலக் குழுக்கள் இல்லாத 14 மாவட்டங்களில் குழந்தைகள் நலக் குழுக்கள் தோற்றுவிக்கப்படும்.

[2010 மே 13

- அனைத்து மாவட்டங்களிலும் தொண்டு நிறுவனங்களின் உதவியோடு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் தத்தெடுப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும்.
- மாநில ஒருங்கிணைந்த குழந்தை தத்தெடுப்பு முகாம் ஏற்படுத்தப்படவுள்ளது.
- மாநில மற்றும் மாவட்ட அளவில் குழந்தைகள் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்படும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் குழந்தைகளின் நலன் பாதுகாக்கப்படும்.

3. சாலையோரங்களில் வசிக்கும் மக்களின் (Pavement Dwellers) நல்வாழ்விற்காக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையின் அடிப்படையில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுக்கான சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

4. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு உணவூட்டுச் செலவினம் 225 ரூபாயிலிருந்து 450 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 14 ஆயிரம் குழந்தைகள் பயனடைவர்.

5. மத்திய மற்றும் மாநில அரசின் உதவியுடன் முதியோர் இல்லங்கள் அமையப் பெறாத மாவட்டங்களான அரியலூர், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஆண்டுக்கு ரூ. 6 இலட்சம் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் முதியோர் இல்லங்கள் தொடங்கப்படும்.

6. மலைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் மையங்களுக்கு தாழ்தள பெஞ்சுகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

7. மத்திய அரசின் உதவியுடன் நடைபெறும் குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (Child Line Facility) 2010-2012 ஆம் ஆண்டுகளில் 17 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

8. அரசு அலுவலகம் மற்றும் நீதிமன்ற வளாகங்களிலும் தேவைக்கேற்ப மழலையர் காப்பக வசதி (Creche) மத்திய அரசின் உதவியுடன் இவ்வாண்டு அமைக்கப்படும்.

2010 மே 13]

9. இருபது ஆயிரம் குழந்தைகள் மையங்களுக்கு குழந்தைகளின் பயன்பாட்டிற்காக 40 இலட்சம் ரூபாய் செலவில் கோரைப் பாய் வழங்கப்படும்.

10. தமிழகத்தில் உள்ள அனைத்து குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளைக் கணக்கெடுக்கும் பணி யூனிசெப் உதவியுடன் 15 இலட்சம் ரூபாய் செலவில் தமிழக அரசால் மேற்கொள்ளப்படும்.

11. புதிய சட்டங்களான பெற்றோர் மற்றும் முதியோர் நலன் பராமரிப்புச் சட்டம், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், வரதட்சணைத் தடுப்புச் சட்டம், குழந்தை திருமணத் தடுப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்கள் குறித்து தமிழகம் முழுவதும் முனைப்பியலான விழிப்புணர்வு முகாம்கள் 25 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

12. எட்டு அரசு மகளிர் விடுதிகளுக்கு புதிய சமையல் பாத்திரங்கள் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும்.

13. குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், 2005-ஐ செயல்படுத்தும் 31 பாதுகாப்பு அலுவலர்களுக்கு மேசை, நாற்காலி உள்ளிட்ட தளவாடப் பொருட்கள் வாங்கி வழங்கிட 3 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. இருபத்தி ஏழு அரசு குழந்தைக் காப்பகங்கள் மற்றும் 7 அரசு சேவை இல்லங்களில் உடனுறைபவர்களுக்குத் தேவையான சானிட்டரி நாப்கின்கள் வாங்கி வழங்கிட 21 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. இருபத்தி ஏழு அரசு குழந்தைக் காப்பகங்கள் மற்றும் 7 அரசு சேவை இல்லங்களில் உள்ள வளரிளம் பெண்களுக்கு உள்ளாடைகள் வாங்கி வழங்கிட 5 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. இருபத்தி இரண்டு அரசு குழந்தைக் காப்பகங்கள் மற்றும் 7 அரசு சேவை இல்லங்களுக்கு ஈரமாவு அரைவை இயந்திரம் வாங்கி வழங்கிட 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2010 மே 13

17. சென்னை, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு இரும்புக் கட்டில்கள் வாங்கி வழங்கிட 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிடும் வகையில் 35 இலட்சம் ரூபாய் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களில் உள்ள பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கிட இவ்வாண்டு 18 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட சிறப்பு ஆணையர் அலுவலகத்திற்கு, மின் ஆளுமைக்காக 41 கணிப்பொறிகள் மற்றும் துணைப் பொருள்கள் வாங்கிட 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. முப்பது மாவட்டங்களில் உள்ள 10,000 குழந்தைகள் மையங்களுக்கு, மையத்திற்கு 600 ரூபாய் வீதம் எடை எடுக்கும் கருவிகள் மொத்தம் 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

22. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட தலைமை அலுவலகத்திற்கு நகல் எடுக்கும் கருவிகள் மூன்று வாங்கிட 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. மாவட்ட திட்ட அலுவலகங்களுக்கு, திட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 8 புதிய ஈப்புகள் வாங்கி வழங்கிட 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. பத்தாயிரம் குழந்தைகள் மையங்களுக்கு தானிய சேமிப்பு கலன்கள் (Stainless Steel Storage Bins) வழங்கிட 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

25. குழந்தைகள் இல்லங்களில் உறையும் குழந்தைகளின் உடைமைகள் மற்றும் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைத்திட 17 இலட்சம் ரூபாய் செலவில் இரும்பு அலமாரிகள் வாங்கி வழங்கப்படும்.

2010 மே 13]

26. சென்னையில் உள்ள அரசினர் மகளிர் காப்பகத்தில் *8* இலட்சம் ரூபாய் செலவில் *80* ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தேக்கத் தொட்டி இவ்வாண்டு அமைக்கப்படும்.

27. சென்னையில் உள்ள சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் *20* இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் தேக்கத் தொட்டி மற்றும் மேல்நிலைத் தேக்கத் தொட்டி இவ்வாண்டு அமைக்கப்படும்.

28. சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து அலுவலகங்களிலும் இணைய தள இணைப்பு மற்றும் மின்னணு நிர்வாகம் செயல்படுத்திட *3* இலட்சத்து *36* ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

29. சமூக பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் உள்ள அலுவலகங்களுக்கு *29* இலட்சத்து *98* ஆயிரம் ரூபாய் செலவில் கணினி வழங்கப்படும்.

30. பதினொரு குழந்தைகள் இல்லங்களில் உறையும் குழந்தைகள் பயனுக்காக *9* இலட்சத்து *28* ஆயிரம் ரூபாய் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்படும்.

31. ஒன்பது குழந்தைகள் இல்லங்களில் உள்ள பள்ளிகளுக்கு *5* இலட்சத்து *50* ஆயரம் ரூபாய் செலவில் மேசைகள் மற்றும் இருக்கைகள் வாங்கி வழங்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS